ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தால் ஆங்கிலத்தில் BA/ BSc பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கிலம் ஒரு பாடமாக MA/ MSc. பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழி மூலம் MA/ MSc பட்டம் பெற்றிருத்தலுடன் ஆங்கில மொழி ஆசிரியராக ஒரு வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.

**3. வேறு தகைமைகள் :**

(அ) *தேசிய இனம்.*- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்

(ஆ) *குடியியல் நிலை.*- விவாகமானவர்/விவாகமாகாதவர்

(இ) *பால்.*- ஆண்/பெண்

(ஈ) *வயது.*- 31 ஒற்றோபர் 2012 ஆந் திகதிக்கு.

(1) ***தொழினுட்ப பொறியியல் பிரிவு பல்வைத்திய மாணவன் உபகரணப் பிரிவு (நிரந்தர)*** .- 18-30 க்கு கூடாதிருத்தல் வேண்டும்.

(2) ***விமானத் தள நிர்மானப் பிரிவு, பல்வைத்தியம் மற்றும் வைத்திய பிரிவு மற்றும் பரிபாலன மிருக வைத்திய பிரிவு***.- 18-35 க்கு கூடாதிருத்தல் வேண்டும்.

(3) ***தொழில்நுட்பப் பொறியியல் பிரிவு மற்றும் பரி பாலன கல்விப் பிரிவு (தொண்டர்)*** :- 18- 40 க்கு கூடாதிருத்தல் வேண்டும்.

(ஊ) நிறை .- (BMI) = $\frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் }^{2}\text{(மீ)}}$

உயரம் .- ஆண்கள் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்.

பெண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும்.

மார்பு.- ஆண் 32" (குறைந்தது)

(எ) பார்வை வர்ணப்பதிவு மட்டம்.- CP2

(ஏ) தொலைபார்வை.- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடியுடன் அல்லது மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப் படாமல்)

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

5. வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவ தற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆகப் பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவுசெய்யப் படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான்படையில் நிரந்தர/ தொண்டர் நிலைகளில் பைலற் ஒபிசர்/பிளையிங் ஒபிசர்/பிளைட் லெப்டினன்ட் /ஸ்குவெண்ரன் லீடர் தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப் படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக் காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கை களுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படு கிறார்கள்.

11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப் படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்பட மாட்டா. வான்படையிலிருந்து ஓய்வுபெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (உ) (17) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களா வார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக் கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :

| | |
|---|---|
| பைலற் ஒபீசர் | - ரூபா 2,29,200 |
| ஃபிளையிங் ஒபீசர் | - ரூபா 2,75,220-34 x 7,740 = ரூபா 5,38,380 |
| ப்ளைற் லெப்டினன்ட் | - ரூபா 3,21,660-28 x 7,740 = ரூபா 5,38,380 |
| ஸ்குவாட்ரன் லீடர் | - ரூபா 3,52,620-24 x 7,740 = ரூபா 5,38,380 |
| விங் கமாண்டர் | - ரூபா 3,62,100-20 x 9,480 = ரூபா 5,51,700 |
| குறூப் கப்ரன் | - ரூபா 4,41,060-18 x 12,600 = ரூபா 6,67,860 |

(ஆ) வைத்திய மற்றும் பல் வைத்திய அதிகாரிகளுக்கான சம்பளம் பின்வருமாறு (வருடத்துக்கு) :

| | |
|---|---|
| ஆரம்ப பிரிவு | - ரூபா 3,13,920 -2 x 7,740 = ரூபா 3,29,400 வருடத்துக்கு |
| தரம் 02 | - ரூபா 3,37,140 -8 x 7,800 = ரூபா 3,99,540 வருடத்துக்கு |
| தரம் 01 | - ரூபா 4,12,140 -15 x 12,600 = ரூபா 6,01,140 வருடத்துக்கு |
| விஷேட பிரிவு | - ரூபா 5,08,680 -12 x 15,720 = ரூபா 6,97,320 வருடத்துக்கு |

(இ) பல் வைத்திய அதிகாரிகளுக்கான சம்பளம் (வருடத்துக்கு) :

*தரம் 02* - ரூபா 3,06,180-4 x 7,740-8 x 7,800 = ரூபா 3,99,540
*தரம் 01* - ரூபா 4,12,140-15 x 12,600 = ரூபா 6,01,140

(ஈ) வைத்திய மற்றும் பல் வைத்திய அதிகாரிகளுக்கான சம்பளம் பின்வருமாறு (வருடத்துக்கு) :

(1) *ஓய்வூதியக் கொடுப்பனவு :*

*ஆரம்ப பிரிவு* - ரூபா 1,700 மாதமொன்றுக்கு
*தரம் 02* - ரூபா 1,700 மாதமொன்றுக்கு
*தரம் 01* - ரூபா 3,400 மாதமொன்றுக்கு
*விஷேட பிரிவு* - ரூபா 3,400 மாதமொன்றுக்கு

(2) *ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு :*
*ஆரம்ப பிரிவு* - ரூபா 2,125 மாதமொன்றுக்கு
*தரம் 02* - ரூபா 1,700 மாதமொன்றுக்கு
*தரம் 01* - ரூபா 400 மாதமொன்றுக்கு

(3) மேலதிக வேலை கொடுப்பனவு - ரூபா 15,000 மாதமொன்றுக்கு

(4) *மேலதிக வேலைப்படி :*

*ஆரம்ப பிரிவு* - ரூபா 300 மணித்தியாலத்திற்கு
*தரம் 02* - ரூபா 325 மணித்தியாலத்திற்கு
*தரம் 01* - ரூபா 370 மணித்தியாலத்திற்கு
*விஷேட பிரிவு* - ரூபா 450 மணித்தியாலத்திற்கு

(உ) **சேவைக் கொடுப்பனவுகள் :**

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு : ரூபா 5,850 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு : ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் வழங்கப்படும் ;

(3) கடினப்படி : மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(4) விசேட கொடுப்பனவு : யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,000 ;

(5) விசேட கொடுப்பனவு : ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம்) ;

(6) மேலதிக கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000 ;

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255);

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 13,861.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை) ;

(11) அடிப்படை படியில் 15 சதவீதம் விஷேட கொடுப்பனவாக தரப்படும்.

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும் பிள்ளைகளுக்கும்) ;

(13) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு ;

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும் ;

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத்தினருக்கும்) ;

(16) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும் ;

(17) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஒபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,850 இலிருந்து ரூபா 4,250 வரை) வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும் ;

(18) சேவை கொடுப்பனவு ரூபா 300, ரூபா 400, ரூபா 500 (வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவைக்காலத்தைப் பொறுத்து);

(19) மேலதிக கொடுப்பனவு ரூபா 1,500 (வைத்தியர், பல் வைத்தியருக்கு மாத்திரம்)

(20) 1/20 கொடுப்பனவு மாதமொன்றுக்கு.- அடிப்படை சம்பளம் × 1/20 × 3 நாட்கள் மட்டும். (வைத்தியர், பல்வைத்தியருக்கு மாத்திரம்)

16. ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டக் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படுவதுமாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

(அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 10.10.2012 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர் விண்ணப்பம் ........................ பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமையதி

காரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பதாரரை நன்கு அறிந்தவரான பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(5) விண்ணப்பதாரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

***குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்ப தாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும்பொழுது கட்டாயமாக வைத்திருத்தல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப் படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற் கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப் படும் :-

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டா.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப் படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

எச். டி. அபேவிக்ரம,
எயார் மாஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

***இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் .................. பிரிவில் அரசாணைபெற்ற அலுவலர் பதவி***

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரஜையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவுமுறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.) : ----.

2. முழுப் பெயர் :----.
(தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு)

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. விண்ணப்பிக்கும் துறை :----.

5. விண்ணப்பிக்கும் பிரிவு :----.

6. நிரந்தர முகவரி :----.

7. நிரந்தர முகவரியில் அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :---.

8. அஞ்சல் முகவரி :----.

9. இணையதள முகவரி :----.

10. பிறந்த திகதி :----.

11. உயரம் :----.

12. மாவட்டம் :----.

13. தேர்தற் தொகுதி :----.

14. கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் இலக்கம் :----.

15. தொலைபேசி இலக்கம் :----.

16. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

17. பாடசாலை அத்துடன்/ அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் : ----.

| பாடசாலை/ சர்வகலாசாலை பெயர்கள் | பரீட்சை | ஆண்டு | பொதுப் பாடசாலை களும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா./த.)<br>க.பொ.த. (உ./த.)<br>தொழில் தகைமைகள் வேறு | | |

18. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

19. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

20. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

21. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----. (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

22. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

23. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ----.

24. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

25. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக : ----.

26. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

27. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

28. விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை- மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவிற்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என் என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணபதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

10-325

---

திருத்தம்

**இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள தொழில்நுட்பக் கல்வி பயிற்சித்திணைக்கள இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை 1ம் வகுப்பின் பதவிகள்**

2012.09.21 ஆந் திகதிய 1777 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள தொழில்நுட்பக் கல்வி பயிற்சி திணைக்கள இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவை 1ம் வகுப்பின் பதவிகள் அறிவித்தல் பின்வரும் மாற்றம் செய்யப்படுவதன் மூலம் திருத்தப்படுகின்றது.

**இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் 1 ஆம் வகுப்புக்கு பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சையின் புள்ளியிடல் திட்டம்**

அதன் 1ம் பிரிவின் 1.2 ஆம் பிரிவின் கீழ் பின்வருமாறு மாற்றம் செய்யப்படுவதன் மூலம் திருத்தப்படுகின்றது.

(விண்ணப்ப முடிவுத் திகதி வரையே சேவைக்காலம் கவனத்தில் எடுக்கப்படும்.)

**மாதிரி விண்ணப்பப்படிவம் இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் 1 இற்கு பதவி உயர்த்தல்**

அதன் 12ம் பிரிவின் 12.1 ஆம், 12.2 ஆம் பிரிவுகள் பின்வருமாறு மாற்றம் செய்யப்படுவதன் மூலம் திருத்தப்படுகின்றது.

12.1 விண்ணப்ப முடிவுத் திகதியில் மொத்த சேவைக்காலம் ...........
12.2 விண்ணப்ப முடிவுத் திகதியில் வகுப்பு II இல் சேவைக்காலம் ........

இவ்வர்த்தமானி அறிவித்தலின் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் திகதி 2012.10.22 என்பதுடன் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே வலுவுடையனவாக இருக்கும்.

கே. ஏ. திலகரத்ன,
செயலாளர்,
இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு.

இல. 354/2, 'நிபுணதா பியச',
எல்விட்டிகல மாவத்த,
கொழும்பு 05.

10-529

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**சுகாதார அமைச்சு**

தாதி மாணவர் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் – 2012

சுகாதார அமைச்சில் தாதி மாணவர் பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. (ஆண் விண்ணப்பதாரர்கள் தாதிமார் சேவை யாப்பு விதியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அமைச்சுக்கு கீழ் உள்ள நிறுவனங்களின் தேவையை அடிப்படையாகக் கொண்டு சேர்த்துக்கொள்ளப்படும்.)

1. க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட Z பெறுமானத்திற்கு அமைய தகைமை அடிப்படையில் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, இலங்கை பூராக திறமை வரிசைக் கிரம அடிப்படையில் 30% மும், மாகாண திறமை வரிசைக்கிரம அடிப்படையில் 70% மும் ஆக தகைமையானோர் தெரிவுசெய்யப்படுவர். பயிற்சி பாடநெறிக்காக அம்மாகாணங்களில் சேர்த்துகொள்ள முடியுமான பயிலுநர்களின் எண்ணிக்கை அம்மாகாணங்களில் உள்ள மத்திய அரசின்கீழ் இயங்குகின்ற மற்றும் மாகாண சபைக்கு உரித்தான வைத்தியசாலைகள் மற்றும் தாபனங்களில் உள்ள வெற்றிடங்களின் அளவை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்படுவர்.

ஒரு பாடநெறிக்காக க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட உச்ச Z பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட வருடங்களில் உயர் தரம் சித்தியடைந்தவர்களிடம் இருந்து விண்ணப்பப்படிவம் கோரும்போது. பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்படுகின்ற முழு பயிலுநர்களின் எண்ணிக்கை தெரிவுசெய்யப்படுவது எல்லா வருடங்களிலும் தகைமைபெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையை ஒவ்வொரு வருடங்களின் தகைமைபெற்ற விண்ணப்பதாரிகளின் விகிதாசார அடிப்படையில் ஆகும்.

2. இது முழு நேர பாடநெறி ஆகும். இதனால் வார நாட்கள் ஐந்திலும் மற்றும் சனி முற்பகலிலும் ஆகும். பல்கலைக்கழகத்தில் அல்லது சுகாதார அமைச்சுக்கு உட்பட்டு அல்லது வேறு அரச தாபனங்களில் அல்லது வேறு ஏதாவது முழுநேர பாடநெறியில் பயிலுகின்ற மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது. யாராவது இவ்வாறு விண்ணப்பித்தது, பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் தெரியவந்தால், பாடநெறியில்/பதவியில் இருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசினால் இவருக்காக செலவிடப்பட்ட எல்லாச் செலவினங்களும் மீள அறவிடப்படும். பல்கலைக்கழகத்தில் முழுநேர பாடநெறியில் பயிலுகின்றவர் இதற்கு விண்ணப்பிக்க எண்ணினால், கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முறையில் செயற்பட வேண்டும். சுகாதார அமைச்சின்கீழ் முழுநேர பயிற்சிப் பாடநெறிகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

2.1 ஏதாவது ஒரு தினத்தில் நீங்கள் பல்கலைக்கழகத்தில் அல்லது அரச தாபனங்களில் முழுநேர பாடநெறிக்காக பதிவுசெய்யப்பட்டு இருந்த அல்லது இருக்கின்ற உங்களது பதிவை 2012.10.28 ஆந் திகதிக்கு முன் இரத்துச்செய்யப்பட வேண்டும். நீங்கள் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்து இருந்தும் விரிவுரைகளுக்கு பங்குபற்றாதவராயினும் பல்கலைக்கழக மாணவராகவே கருதப்படுவதனால், அவ்வாறான விண்ணப்பதாரர்களும் தமது பல்கலைக்கழக பதிவை இரத்துச்செய்ய வேண்டும். தேவையானபோது இதை உறுதிப்படுத்திக்கொள்ள எழுத்து மூலமான சான்றுகள் உங்களிடம் இருக்க வேண்டும்.

2.2 மேற்குறிப்பிடப்பட்ட 2012.10.28 ஆந் திகதியில் நீங்கள் பல்கலைக்கழகத்தில் அல்லது சுகாதார அமைச்சிற்கு உட்படுகின்ற பாடநெறியில் பதிவுசெய்யாதவராயினும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இப்பாடநெறிக்காக பரீட்சார்த்திகள் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினத்திற்குள் பதிவுசெய்யப்பட்டு இருப்பின் இவ்வாறானவர்களும் இப்பாடநெறிக்கு தகைமையற்றவராவர்.

2.3 நீங்கள் ஏதாவது பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை பூர்த்திசெய்தவராயின், அப்பட்டப்படிப்பு நடைமுறைக்கு வரும் திகதி விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னைய தினமாக வேண்டும்.

**கவனிக்க வேண்டியவை**.- (1) மேல் 2.1 தொடக்கம் 2.3 வரை குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் எல்லாம் பூர்த்திசெய்து இருப்பினும், கட்டாயமாக உங்களை இப்பாடநெறிக்காக உள்வாங்கப்படும் என்று இவ்வர்த்தமானி அறிவித்தலின் எந்தவொரு வாசகத்தின் மூலமும் கருத்து தெரிவிக்கப்படவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

(2) மேல் 2.1 தொடக்கம் 2.3 வரை குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்திசெய்து இருப்பின் நீங்கள் தகைமை பெறுவதற்கு போதுமான Z பெறுமானத்தை பெற்று இல்லாவிடின் அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு நிபந்தனை பூர்த்திசெய்து இல்லாவிடின் எக்காரணங்களினாலும் இப்பாடநெறிக்காக தகைமை யுள்ளவராகமாட்டீர்.

(3) அவ்வாறே நீங்கள் போதுமானளவு Z பெறுமானத்தை பெற்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகள் எல்லாவற்றையும் பூர்த்திசெய்து இருப்பினும் 2.1 தொடக்கம் 2.3 வரையான குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் பற்றி குறிப்பிடப்படவில்லையாயின், எம்முறையிலும் இப்பாடநெறிக்காக தகைமை உடையவராக மாட்டீர் என்பது மேலதிக தகவலாகும்.

3. **கல்வித் தகைமைகள்**.- (அ) 2009, 2010 மற்றும் 2011 ஆம் வருடங்களில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தரம்) பரீட்சையில் விஞ்ஞான பாடநெறிக்குரிய, உயிரியல்/ கணிதம் மற்றும் விவசாய விஞ்ஞானப் பாடநெறியின் அனைத்துப் பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல்.

கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக மேல்குறிப்பிடப்பட்ட இரு பரீட்சைகளினதும் சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைத்து அனுப்பவேண்டும்.

4. **ஏனைய தகைமைகள்**.- (அ) இலங்கைப் பிரசையாக இருத்தல்.

(ஆ) பயிற்சியின்பின் பயிற்சியில் இணைந்துகொண்ட மாகாணத்திற்குள் குறைந்தளவு 10 வருடங்களாவது சேவை புரிய வேண்டும்.

(இ) 2012.10.28 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத 28 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயரம் 4 அடி 10 அங்குலத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

(உ) இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் சேவையாற்ற விருப்பம் மற்றும் எல்லாவிதத்திலும் உடல் ரீதியாக தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஊ) தான் விண்ணப்பிக்கும் மாகாணத்திற்குள் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு 3 வருடங்கள் தொடராக வசித்திருக்க வேண்டும். இவ்வாறு வசித்ததை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு கீழ் காரணங்களில் ஒன்றைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும் :-

(i) பரீட்சார்த்தி குறிப்பிட்ட மாகாணத்திற்குள் பிறந்தவராக இருத்தல்.

(ii) வர்த்தமானி அறவித்தலின் குறிப்பிட்ட திகதிக்கு ஏறத்தாழ 5 வருடங்களிற்குள் 3 வருடங்கள் தொடராக அம்மாகாணத்திற்குள் வசித்திருக்க வேண்டும். (இதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு பிரதேச செயலாளரின் கையொப்பத்துடன் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் அல்லது 3 வருடங்களுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் முன்வைக்கப்பட வேண்டும்).

(iii) தொடராக 5 வருடங்கள் குறிப்பிட்ட மாகாணத்தில் பாடசாலைக் கல்வியைப் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.- யாராவது பரீட்சார்த்தியின் தாய் அல்லது தந்தை மாகாண சபைகளில் அல்லது கூட்டுத்தாபனங்களில் இடமாற்றம் பெறக்கூடிய சேவையில் ஈடுபட்டு இருந்தால் அப்பரீட்சார்த்தி தனது தாய் அல்லது தந்தை பிறந்த மாகாணத்தை தான் பிறந்த மாகாணமாக தெரிவுசெய்துகொள்ள முடியும். (தாய் அல்லது தந்தையின் பிறப்பத்தாட்சிப்பத்திரத்தை முன்வைக்க வேண்டும்.)

5. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- (அ) இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய ஏ4 அளவு கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தில் உள்ளவாறு இல. 1 தொடக்கம் 9 வரையான வாசகங்கள் 1 ஆம் பக்கத்திலும், இல. 10 வாசகம் 2 ஆம் பக்கத்திலும், இல. 11 தொடக்கம் 13 வரையான வாசகங்கள் 3 ஆம் பக்கத்திலும் வருமாறு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ) சரியான முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் தபால் உறையில் இட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் ''தாதி மாணவர் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் - 2012'' என்று குறிப்பிட்டு 2012.10.28 ஆந் திகதிக்கு முன் தங்கள் ''நிரந்தர பதிவு மாகாணத்தின்'', மாகாண சுகாதார செயலாளருக்கு கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அந்தந்த மாகாண சபைகளுக்குரிய சுகாதார செயலாளர்களின் முகவரிகள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளது :-

(1) செயலாளர், மேல் மாகாண சுகாதார அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 7

(2) செயலாளர், மத்திய மாகாண சுகாதார அமைச்சு, த. பெ. இலக்கம் 121, சங்கராஜ மாவத்தை, கண்டி

(3) செயலாளர், ஊவா மாகாண சுகாதார அமைச்சு, இல. 301, ஆர். எச். குணவர்தன மாவத்தை, பதுளை

(4) செயலாளர், வடமேல் மாகாண சுகாதார அமைச்சு, 3 ஆவது மாடி, மாகாண சபை கட்டிடத் தொகுதி, குருணாகல்

(5) செயலாளர், வடமத்திய மாகாண சுகாதார அமைச்சு, தர்மபால மாவத்தை, அநுராதபுரம்

(6) செயலாளர், தென் மாகாண சுகாதார அமைச்சு, கீழ் டிக்ஸன் மாவத்தை, காலி

(7) செயலாளர், சப்ரகமுவ மாகாண சுகாதார அமைச்சு, புதிய நகரம், இரத்தினபுரி

(8) செயலாளர், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, உட்துறைமுக வீதி, திருகோணமலை

(9) செயலாளர், வட மாகாண சுகாதார அமைச்சு, சுகாதார கிராமம், பண்ணாய், யாழ்ப்பாணம்

இலங்கை நிருவாக சேவை/கல்விச் சேவை/அரச கணக்காய்வாளர் சேவை/ அரச பாடசாலை அதிபர்கள்/ சமாதான நீதவான் அல்லது சட்டத்தரணி வருடாந்தம் ரூ. 2,40,360 இற்கு குறையாத ஆரம்ப சம்பளத்துடன் அரச பதவி வகிக்கின்ற உத்தியோகத்தரால் விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தில் முத்திரை ஒட்டவேண்டிய பெட்டியில் ரூபா 300 பெறுமதியான முத்திரை ஒட்டி தனது கையொப்பத்தை இட்டு அதனை இரத்துச்செய்ய வேண்டும்.

6. அரச அல்லது அரச சார்பான நிறுவனங்களில் சேவை புரிகின்றவர்களின் விண்ணப்பப்படிவம் திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பவேண்டும். இத்துடன் இது வெளிவாரியான சேர்த்துக்கொள்ளப்படல் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

7. மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்கள் Z பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட வர்கள் மாத்திரம் சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சேவைகளில் ஈடுபட்டுள்ள பதவிநிலை தாதி உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் கூடிய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின்போது கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதி முன்வைக்கப்பட வேண்டும் :-

(1) பிறப்பத்தாட்சிப் பத்திரம் ;

(2) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையின் பெறுபேறு மற்றும் பெறுமானம் அடங்கிய சான்றிதழின் மூலப்பிரதி (இச்சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்).

(3) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சைப் பெறுபேறு சான்றிதழின் மூலப்பிரதி (இச்சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்).

(4) தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் (இதில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்).

(5) மேல் குறிப்பிட்ட 4 (ஊ) வில் வசிப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள பிரதேச செயலாளரின் கையொப்பத்துடன் கூடிய கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படுகின்ற பதிவை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ் (கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் அல்லது 3 வருடங்களுக்குரிய வாக்காளர் பெயர்ப்பட்டியலின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதி).

(6) விவாகமாகாதவர் என்பதை உறுதிப்படுத்த சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட உறுதிப்பாடு.

8. **பயிற்சித் திட்டம்** : (1) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தாதி மாணவ மாணவியாக பயிற்சிக் கல்லூரிகளுக்கு உள்வாங்கப்படும் இவர்கள் 3 வருடங்களுக்குரிய பயிற்சிப் பாடநெறியில் இணைந்து கொள்வர்.

(2) பயிற்சிக்காக உள்வாங்கப்படும் சந்தர்ப்பத்தில் பயிலுநர்கள் மீது கல்லூரிகளில் நடைமுறையில் உள்ள சட்டவிதிக்கோவை வழங்கப்படும். இச்சட்டவிதிக்கோவைக்கும் மற்றும் காலத்திற்கு காலம் இடப்படுகின்ற சட்டவிதிகளுக்கு இவர்கள் கட்டுப்பட வேண்டும்.

(3) பயிற்சிபெறும் காலத்திற்குள் குறித்த பரீட்சைகளில் சித்தியடையாமை அல்லது கடமை மற்றும் நடத்தை அதிருப்தியாக இருத்தல் அல்லது பரீட்சை மற்றும் விடுமுறை நிபந்தனைகளை கடைப்பிடிக்க முடியாமல் போதல் அல்லது பயிற்சிக்கு இணைவதற்காக முன்வைக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் உண்மையற்றவை என்று தெரியவந்தால் பயிலுநர்களை பயிற்சியில் இருந்து எச்சந்தர்ப்பத்திலும் மீள்கொடுப்பனவுகள் இன்றி நிறுத்த முடியும். பயிற்சிக் காலத்திற்குள் பயிலுநர்கள் எவ்விதத்திலும் விடுமுறை பெறுவதற்கான உரிமை இல்லாததுடன் பயிற்சிக்காக சமுகமளிக்காத தினத்திற்காக கொடுப்பனவுகளில் இருந்து சிறியதோர் தொகை குறைக்கப்படும். எவ்வாறாயினும் பரீட்சையில் தோற்றுவதற்காக ஒவ்வொரு வருடத்திலும் 80% வரவு கட்டாயமாக இருக்க வேண்டும்.

(4) தாதிக் கல்லூரிகளில் பயிற்சி பெறும் காலத்திற்குள் பரீட்சார்த்திகளுக்கு கீழ் உள்ளவாறு கொடுப்பனவுகள் வழங்கப்படும் :

(i) 1 ஆவது வருடம் - மாதாந்தம் ரூ. 12,920 ;

(ii) 2 ஆவது வருடம் - மாதாந்தம் ரூ. 13,040 ;

(iii) 3 ஆவது வருடம் - மாதாந்தம் ரூ. 13,160.

பயிற்சியை நிறைவாக பூர்த்திசெய்த பின் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்த பயிலுநர்கள் தரம் III பதவிநிலைத் தாதி உத்தியோகத்தராக குறித்த சம்பள அளவுத்திட்டத்திற்கு அமைய பதவி வெற்றிடங்களின் அடிப்படையில் சுகாதார செயலாளரால் நியமனம் வழங்கப்படும்.

(5) பயிற்சிக் காலத்திற்குள் பயிற்சியில் இருந்து விலகல் அல்லது விலக்கல் அல்லது பயிற்சியை கைவிட்டுவிடல் போன்ற காரணங்களுக்காக பயிற்சிக் காலத்தில் பயிலுநருக்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் அரசினால் பொறுப்பேற்ற செலவுகளுக்காக செலவிடப்பட்ட தொகை இவர்களினால் திணைக்களத்திற்கு மீள செலுத்தப்படல் வேண்டும்.

10. **விவாகமாகாத நிபந்தனைகளும் மற்றும் ஒப்பந்தமும்.**- (அ) எல்லா விண்ணப்பதாரிகளும் விண்ணப்பப்படிவம் அனுப்பும் திகதியில் விவாகமாகாதவராக இருப்பதுடன் பயிற்சிக் காலத்திற்குள் விவாகமாகாதவராக இருப்பது கட்டாயம். விவாகமாகாததை உறுதிப்படுத்திக்கொள்ள எல்லா விண்ணப்பதாரிகளும் சமாதான நீதவான் முன்னிலையில் எழுதி கையொப்பமிட்ட உறுதிப்பாட்டை நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்க வேண்டும்.

(ஆ) தாதி மாணவ/மாணவியர் தாதிப் பயிற்சிக்காக கல்லூரிக்கு உள்நுழையும்போது பயிற்சியைத் திருப்தியாக நிறைவுசெய்வதுடன், பயிற்சியைப் பூர்த்திசெய்தபின் குறைந்தபட்சம் 10 வருட காலத்திற்கு சுகாதார அமைச்சு அல்லது மாகாண சுகாதார அமைச்சுகளின்கீழ் உள்ள வைத்தியசாலைகளில் சேவை புரிவதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்தில் ஈடுபட வேண்டும். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இக்கால எல்லை, காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும்.

11. **சேவையில் ஈடுபடுவதற்கான நியமங்கள்** .- (அ) பயிற்சி முடிவின்பின் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசு பொருந்தி இல்லை. என்றாலும் பரீட்சார்த்தி தான் பயிற்சியில் இணைந்துகொண்ட பாடநெறிக்குரிய ஏற்பாடுகளின் நிபந்தனைகளுக்கு அமைய மற்றும் மாகாணங்களில் நிலவுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் III ஆம் தர பதவிநிலைத் தாதி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிப்பதற்கு ஆலோசிக்கப்படும். முதல் நியமனம் தொடக்கம் 10 வருடங்கள் வரை முதல் நியமனம் பெறும் இடத்தில் சேவை புரிவது கட்டாயமாகும்.

ஒவ்வொரு பாடநெறியின் முடிவிலும் நடைபெறுகின்ற இறுதி எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தயாரிக்கப் படுகின்ற திறமை ஆவணங்களிற்கமைய மற்றும் மாகாண மட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற 70% மும், இலங்கை முழுவதும் திறமை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற 30% மும் கவனத்திற்கொண்டு வெற்றிடங்கள் நிலவுகின்ற தாபனங்களிற்கு நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெறும்.

(ஆ) மேற்படி பயிற்சியின்பின் நடைபெறுகின்ற இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமிக்கப்படுகின்ற III ஆந் தர பதவிநிலைத் தாதி ஓய்வூதியத்துடன் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுத்தொகை செலுத்த வேண்டும்.

(இ) III ஆம் தர பதவிநிலைத் தாதியாக நியமிக்கப்படுவது 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

12. **சேவைக்கான நிபந்தனை** : (1) எல்லா பரீட்சார்த்திகளும் பயிற்சியை ஆரம்பிப்பதற்கு முன் மருத்துவ பரிசோதனைக்கு முகம் கொடுக்க வேண்டும்.

(2) அரச நிருவாக சுற்றறிக்கை 6/2006 (iv) இன் MT 7-2006 A இற்கமைய ரூ. 15,620 - 4 x 180 - 6 x 240 - 1 x 320 - 20 x 360 - ரூ. 28,500 சம்பள அளவுத்திட்டத்தில் தாதி உத்தி யோகத்தர்கள் III ஆந் தர பதவிநிலைத் தாதி உத்தி யோகத்தராக நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக நியமனம் வழங்கப்படும்.

(3) தாதி சேவையின் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரச சேவை ஆணைக்குழுவினால் அரச சேவை சம்பந்தமாக இடப்படுகின்ற சட்டவிதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள், தாதி சேவை யாப்பு விதிகளின் ஏற்பாடுகள், அரச நிதி ஒழுங்குவிதிகள், அரசின் வேறு ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் என்பவற்றிற்கும் அவற்றிற்குரியதாக இடையிடையே வெளியிடப்படும் திருத்தங்களுக்கும் இசைய நடக்க வேண்டும்.

(4) கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடும் விபரம் மிக கவனத்துடன் மற்றும் சரியானவை களை மட்டும் குறிப்பிட வேண்டும். பயிற்சிக்கு சேர்த்துக் கொண்ட பின் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பின் குறிப்பிட்ட சான்றிதழ்கள் போலியானவை என்று நிரூபணமானால், சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புல னாய்வுத் திணைக்களத்துக்கு முன்வைப்பதுடன் அவ்வாறு வழங்கப்பட்ட நியமனம் இரத்துச்செய்யப்படுவதுடன் பயிற்சியில் அல்லது பதவியில் இருந்து வெறுமையாக்கப்பட்டு இது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து மீண்டும் அரச சேவையில் இணைத்துக்கொள்ள முடியாதவர்களின் பெயர்ப்பட்டியலுக்கு சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பயிற்சிக்காலத்தில் இவருக்காக அரசினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள். அரசினால் பொறுப்பேற்ற செலவுகள் மற்றும் ஒப்பந்தத்திற்குரிய தொகை என்பவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

(5) பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளும் விண்ணப்பதாரிகளுக்காக பயிற்சிக் கல்லூரிகளில் விடுதி வசதி அளிப்பதற்கு இவ்வமைச்சு பொறுப்பேற்காது

(6) இப்பயிற்சிக் காலத்திற்குள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுவதற்கு எவ்வித உரிமையும் இல்லை. அவ்வாறே பயிற்சியின்பின் பயிலுனர்கள் பதவியில் நியமனம் பெற்றால் அதன் பின்னரும் தனியார் சேவையில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு எவ்விதமான உரிமையும் இல்லை. இவ்வாறு ஏதும் நடைபெறுபெறுவது தெரியவந்தால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான படிமுறைகள் நடைபெறும்.

(7) பயிற்சிக்கு இணைந்துகொள்ளல் சம்பந்தமாக இவ்வர்த்த மானி அறிவித்தலின் மூலம் குறிப்பிடப்படாத ஏதாவது ஒரு காரணம் தொடர்பாக பிரச்சினை ஏற்படின், இது சம்பந்தமாக சுகாதார அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிடையே ஏதாவது ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழி மூலமே மேலோங்கி நிற்கும்.

(டாக்டர்) வை. எம். நிஹால் ஜயதிலக்க,
செயலாளர்.

சுகாதார அமைச்சு,
2012.09.17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சு**

தாதி பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் - 2012

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(ஆ) முழுப்பெயர் (தமிழில்) :----.

2. தபால் முகவரி (ஆங்கிலத்தில்) :----.

3. (i) நிரந்தர முகவரி (தமிழில்) : [ ]
(ii) மாவட்டம் (ஆங்கிலத்தில்) : [ ]
(iii) தொலைபேசி :-
கையடக்க தொலைபேசி இலக்கம் : [ | | | | | | | | | ]
நிரந்தர தொலைபேசி இலக்கம் : [ | | | | | | | | | ]

4. பிறந்த திகதி :-
ஆண்டு : 19........ மாதம் :----, திகதி :----.

5. 2012.10.28 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. பால் :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(பொருத்தமான கூட்டில் ✓ குறியிடுக.)

7. நீங்கள் இலங்கைப் பிரசையா ?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(பொருத்தமான கூட்டில் ✓ குறியிடுக.)

8. தேசிய அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

9. உயரம் :
அடி ..................... அங்குலம் ........................

10. (அ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சை
(விஞ்ஞான பிரிவு பாடங்கள்) :
(தயவுசெய்து புள்ளிவிபரங்களை இணைக்கவும்.)

(1) வருடம் :----, சுட்டிலக்கம் :----, வெட்டுப்புள்ளி :----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

(ஆ) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சை :

முதலாம் அமர்வு-
(i) பரீட்சை வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |
| 11. | | |
| 12. | | |

இரண்டாம் அமர்வு-
(i) பரீட்சை வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |
| 11. | | |
| 12. | | |

11. ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(பொருத்தமான கூட்டில் குறியிடுக.)

ஆம் எனில் தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :----.

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானதும் சரியானதுமாகும். கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழையென காணப்படுமிடத்து நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என நன்கு அறிவேன்.

| |
|---|
| ரூபா 300 பெறுமதியான முத்திரை ஒட்டி அதன்மேல் கையொப்பம் இடுவதன் மூலம் இரத்துச்செய்யவும். |

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. **உறுதிப்படுத்தல்** :

விண்ணப்பதாரியான .................................................... ............. எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் .............................. 2012 ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

10-230

---

## பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு

### கிராம அலுவலர் III ம் தரத்துக்குச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை -2012

1. நாடு பூராகவும் உள்ள பிரதேச செயலாளர் பகுதிகளில் வெற்றிடங்கள் நிலவும் கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம அலுவலர்களை நியமிப்பதற்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்து கொள்வதற்கு நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகப் பின்வரும் தகைமைகள் உள்ள ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரியொருவருக்கு 06ம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தகைமை பெறும் பிரதேச செயலாளர் பகுதியில் நிலவும் வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கலாம்.

3. பிரதேச செயலாளர் பகுதிகள் மற்றும் மாவட்டங்கள் பற்றிய விபரங்கள் 1ம் உப அட்டணையில் காணப்படுகின்றன. விண்ணப்ப தாரர்கள் தாம் விண்ணப்பிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் அதன் இலக்கம் என்பவற்றை அந்த உப அட்டவணையில் குறிப்பிட்டவாறு சரியான விண்ணப்பப்படிவத்தில் விதிக்கப்பட்ட இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அது பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. அவ்விவரங்களைப் பிழையாகக் குறிப்பிடுதல் காரணமாக விண்ணப்பதாரரொருவருக்கு ஏற்படும் எந்தவொரு நஷ்டம் தொடர்பாக எந்தவொரு கோரிக்கையும் சீர்தூக்கிப் பார்க்கப்பட மாட்டாது.

**4. போட்டிப் பரீட்சை பற்றிய விபரங்கள்.-**

4.1. பரீட்சை மொழிமூலம் : இப்பரீட்சை சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் எனும் மொழிகளில் நடாத்தப்படும்.விண்ணப்பதாரர்கள் ஒரு மொழியில் மாத்திரம் தோற்றுதல் வேண்டும். விண்ணப் பிக்கப்படும் மொழி மூலம் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

4.2. கிராம அலுவலர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பரீட்சை கீழ் குறிப்பிடப்பட்ட இரு வினாப்பத்திரங்களைக் கொண்டது

| | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|
| 4.2.1. மொழியாற்றல் | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| 4.2.2. பொது அறிவும், சவாலும். | 1 1/2 மணித்தியாலம் | 100 |

**4.3. பாட விதானம்**

4.3.1. **மொழியாற்றல்** :-இவ்வினாப்பத்திரம் விண்ணப்ப தாரர்களின் கருத்துத் தெரிவிப்பு, புரிந்துகொள்ளுதல், எழுத்துரு அமைப்பு, மொழியும் கட்டுரையும் வழங்கப்பட்ட கட்டுரையொன்றைச் சுருக்கமாக்குதல்,வழங்கப்பட்ட பந்தியொன்றைச் சுருக்குதல், வழங்கப்பட்டுள்ள தரவு களின் படி விபரங்களை தயாரித்தல் வாக்கியங்கள் சிலவற்றின் கருத்தைத் தனிவாக்கியத்தில் எழுதுதல், இலகுவான இலக்கணப் பயன்பாடு பற்றிய அறிவைப் பரிசீலனை செய்யும் வினாக்களைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்

4.3.2. **பொது அறிவும் உளச்சார்பும்** :-இவ்வினாப்பத்திரம் மூலம் நாட்டின் வரலாறு, பூகோள, சமூக பொருளாதார ரீதியில் முக்கியமான தகவல்கள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு சமகாலத் தகவல்கள் பற்றிய பொது அறிவு, எண்கணிப்பு தர்கிக்கும் சக்தி, பிரச்சினைகளைத் தீர்த்தல், தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல் உட்பட பொது அறிவை அளக்கும் வகையில் தயாரிக்கப்படும் விடயதான கேள்விகளை கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்.

4.4. விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு விடயத்திலும் குறைந்த அளவு 40% புள்ளிகள் பெறுதல் வேண்டும். எழுத்துப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் வரிசையின் பிரகாரம் விண்ணப்பதாரர்கள் முன்னிலைப்படுத்தப்படுகையில் ஒவ்வொரு விடயத்துக்கும் 40% அல்லது அதற்கு மேலாகப் புள்ளிகள் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் கவனத்திலெடுக்கப்படுவர்

